

ஓலை 79 | ஓசை 202 | ஜூலை 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து**

## பொருள்

**ஒரு பிறப்பில், ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால், அ:.து அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன்**
**குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# கல்வியும் கனவும்

உயர்த்திடும் படிகளாய் உலகினில் இருப்பதும்
இயக்கிடும் ஆற்றலாய் இயங்கிடும் கருவியும்
உயிரென மதியதும் ஓங்கியே போற்றிடும்
வியனிலை தந்திடும் விதையெனும் கல்வியே

கனவுகள் வண்ணமாய் கண்டிட வைத்திடும்
நினைவினில் தங்கினால் நிலைத்திடும் புகழ்தரும்
புனைவுகள் இன்றியே புவிதனில் ஏற்றிடும்
அனைத்திலும் முதன்மையை அழகுடன் வழங்கிடும்

அறிவினைத் திறந்திட ஆழமாய் கற்றிடு
செறிவுடன் பயின்றிட சிறப்புகள் கோர்த்தெடு
பறித்திடா செல்வமும் பாரினில் கல்வியே
மறையென நாளுமே வணங்கிடு நீயுமே

படித்திடா மேதையும் பாங்குடன் செதுக்கிய
படிகளை மதிக்கையில் பளிங்கென மிளிருது
வடித்திடும் உன்னையும் வலிமைகள் புகுத்தியே
படித்திடு தெளிவுடன் பாரினை ஆளவே



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# இடுக்கண் அழியாமை

துன்பத்தில் தளராது
புன்னகைத்து ஓடவிடு.
துன்பம்நெருக்கி எதிர்க்கவல்ல
நல்வழி இதன்றிவேறில்லை.

பெருவெள்ளமாய் பெருகிவரும்
துன்பத்தின் தன்மையதை.
உள்ளத்தால் நினைத்தமட்டில்
ஒன்றுமில்லாது மறைந்துபோம்.

துன்பங்கண்டு கலங்கா
மனத்தெளிவு கொண்டோர்.
துன்பத்திற்கே துன்பந்தந்து
வென்றோங்கி நிற்பர்.

தடைவென்று வண்டியிழுக்கும்
எருதுபோல் விடாமுயற்சியை.
தன்னகத்தே கொண்டோனுக்கு
வருந்துன்பமே துன்பப்படும்.

தொடர்துன்பம் மேவிடினும்
கலங்காது நிற்போனுக்கு.
நேர்துன்பமே துன்பப்பட்டு
விலகியோடிப் போய்விடும்.

பெற்றதனத்தை மகிழ்வோடு
காவாது விடுத்துவிட்டு.
வறுமையின்காலத்தே இழந்தோமென
அல்லலுறுவோர் எவ்வகையினரோ?

## இடுக்கண் அழியாமை

துன்பத்தின் இலக்கு
இவ்வுடலென உணர்ந்து.
துன்பங்கண்டு கலங்காதோரே
இவ்வுலகில் மேலோராவர்.

இன்பம்விரும்பி போற்றாதோன்
துன்பம் வருங்காலதனை.
இயற்கையெனத் தெளிந்து
கலக்கமடைவ தில்லையாம்.

இன்பம் வருங்காலதனை
நுகரவிரும்பிப் போற்றாதான்.
துன்பம் வருங்காலதனையும்
நுகர்ந்து கலங்குவதில்லையாம்.

துன்பமே தனக்கின்பமாய்க்
கருதுவோரின் பகைவரும்.
அவன்முயற்சி விரும்பும்
சிறப்புநிலை அடைவான்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# மணிமேகலை

## (இருபத்தி ஒன்று)

19. உதயகுமரனை வாளால் எறிந்த காதை.
உதயகுமரன் அறிந்தான் .
அரசன் ஆணை, மணிமேகலை அருள் சிறைக்கோட்டமாக மாயறிது
வரமான அறவோர் அங்கு தங்கினர், புத்தன் கோவில் உருவானது
தரமான உணவு தயாரித்து , அதை அருந்தும் கூடம் கட்டப்பட்டது
உருமாறிய மணிமேகலை காயசண்டிகை என்று உணர்ந்தான்

"யார்இகழ்ந்தாலும் எவர் சினந்தாலும்,அவள் காதலை நான் விடேன்
பார் போற்ற அவளை கை பற்றி என் காதலி ,நாட்டின் ராணியாவாள்
தேரில் ஏற்றி வையகம் முழுவதும்பவணி வருவேன் இது சத்தியம்"
ஊர் தேடி மணிமேகலை தங்கியுள்ள உலக அறவி ஊடு சென்றான்

விருச்சிக முனிவன் யானைத் தீ நோயில் அவள் வாட சாபம் இட்டான்
அரும் பசி, வாடிய காயசண்டிகை மணிமேகலை ,சாபம் நீங்கினாள்
வருவாள் என காத்திருந்த கணவன் காஞ்சணன் புகார் நகர் வந்தான்
தெருவெங்கும் தேடிமனைவி உருவில் மணிமேகலையைக்கண்டான்

தன் மனைவி காயசண்டிகை என்று நினைத்து அவன் பேசுகிறான்
உன் கை பாத்திரம் தீராத பசி நீங்க உன்னிடம் வந்து சேர்ந்ததா?
என்னை விட்டுப் பிரிந்து பன்னிரெண்டு ஆண்டுகள் கடந்து போயின
உன் சாபம் நீங்கியதால் இனி நாம் சேர்ந்து வாழலாம் வா என்னோடு ''.

பதில் கூறாமல் மணிமேகலை அவ்விடம் , அவனை விட்டு அகன்றாள்
மதியற்ற உதயகுமரன் திருந்தி வாழ அவனுக்குப் புத்திமதி கூறினாள்
கதியற்று காதல் கொண்ட அவனிடம் நிலையாமை பற்றி பேசினாள்
புதிதல்ல இன்றைய இளமை அழகு நாளை முதுமையில் தள்ளாடும்

நன்றாகக் கேள் நிமிர்ந்த கொங்கை காலி பையென தொங்கும்
அன்றாடம் பார்க்கும் வில் புருவம் இறால் வற்றல் போலாகி விடும்
கொன்றுவிடு காதலை , எலும்பும் நரம்பும் சேர்ந்த கூடு இவ்வுடல்
வென்றுவிடு காமத்தை அரசனாக மக்கள் நலம் பேணி வாழ்க

இப்போது காயசண்டிகை உருவில் மணிமேகலை பேசினாள்
அப்போது அங்கு வந்த காஞ்சனன் தன் மனைவயைக் கண்டான்
தப்பாக புரிந்து கொண்டான் அவள் அயலானிடம் பேசுவதை
எப்பவும் இப்படித்தானா அவனை வீழ்த்த வாளை உருவினான்

அவன் வரும் வரை மறைவாக காத்திருந்தான் காஞ்சனன் வாளோடு
இவன் ஊழ்வினையே அடியிட்டு நடத்திச் செல்ல வெளியே வந்தான்
கவனமாக உதயகுரன் மலையொத்த தோள் துண்டாக வெட்டினான
சவமானவனைக் கண்டு தன் முற்பிறவி கணவன் கண் கலங்கினாள்

தூணில் இருக்கும் சிலை கந்திற்பாவை அவனிடம் பேசியது
வானில் சென்ற காயசண்டிகை துர்க்கையிடம் சேர்ந்தாள்
வீணாக மணிமேகலை மனைவி என்று நினத்துவிட்டாய்
தானாக வந்த ஊழ் வினை பயன் உன்னையும் விடாது '' என்றது .



தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# எழு பொங்கி எழு!

வறுமையில் வாடுவோரிடம்
வன்முறை செய்வோர்
சிறார்களைக் கொத்தடிமையாக்கிச்
சீரழிக்கும் எத்தர்கள்


நம்பவைத்து கழுத்தறுக்கும்
நயவஞ்சகக் கும்பல்
உழைப்போரை நாளும்
உறிஞ்சிக் கொழுப்போர்

குடும்பத்திற்கு உதவாமல்
குடிபோதையில் நீந்துவோர்
கெடுதி என்றறிந்தும்
கலப்படம் செய்வோர்

நெகிழி பயன்பாட்டை
நிலைக்கச் செய்வோர்
சூடான உணவை
நெகிழிப்பையில்
ஊற்றுபவர்

இருசக்கர வாகனத்தில்
இனிதாய்ச் செல்வோர்
செல்பேசியில் உரையாடி
சென்றே இடித்தல்

சாலைவிதிகளை மதிக்காமல்
சடுதியில் கடப்போர்
மழலைகளை வீட்டில்
கட்டி வளர்ப்போர்



நடப்போரின் தாலியை
அறுத்து பிடுங்குவோர்
இரைதேடும் பறவைகளை
இரக்கமின்றிக் கொல்வோர்

தெருவில் விற்போரிடம்
தெரிந்தே பேரம்பேசுவோர்
இவர்களைக் கண்டால்
பொங்கியெழு உடனே.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர்அணை

ஆத்திகமும் பேசுகிறது
நாத்திகமும் பேசுகிறது
மனிதவாய்.
/
தடுக்கியபுல்
தாங்கிக் கொண்டது
பட்டுமெத்தையாய்
/
என் காதலைக் கொண்டுபோக
வந்தவள் ; என்னைக் கொன்று
விட்டுப் போகிறாள்.
/
விடியும்வரை அணையவில்லை
பொத்தல் குடிசையில்;
நிலவின் வெளிச்சம்.
/
பயணம் நிறைவுற்றதும்
வழக்கம் போல் வீதியில் விட்டுவிட்டாய்.
உன் பிரியமின்றி தவிக்கிறேன் நான்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# ஆத்தோரம் வீடு கட்டி

விவசாயம் செஞ்சிதான்
நிலத்துல பாடுபட்டேன்
ஒழச்சக் காசத்தான்
பத்திரமா வச்சேன்

சிக்கனமாச் செலவழிச்சி
மிச்சம் பிடிச்சேன்
சேத்த பணத்துல
காணிநிலம் வாங்கினேன்

குடியிருக்கத்தான் ஆத்தோரம்
வீடு கட்டினேன்
வீட்டை சுத்தி
மரங்களை வளர்த்தேன்

விளக்கேத்த அத்தமகள
கண்ணாலம் கட்டிகிட்டேன்
சந்தோசமா குடும்பம்
நடத்தினோம் நாங்க

அளவோட புள்ள குட்டியும்
பெத்துக்கிட்டோம்
கம்மஞ்சோறும் கேப்பை கூழும்
சாப்பிட்டாங்க



நோயும் வந்ததில்ல
வைத்தியமும் பார்த்ததில்லை
மரத்தில ஊஞ்சல் கட்டி
வெளையாண்டாங்க

சிலுசிலுவெனக் காத்துல
ஆரோக்கியமும் வந்ததே
பள்ளிக்கூடமும் போனாங்க
அறிவாளியா ஆனாங்க

கழனியையும் அக்கறையாப்
பாத்துக் கிட்டாங்க
ஒத்தாசையா என்கூட
கடைசிவரை இருந்தாங்க.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# தூரத்து காதல்

எட்டித் தொடும் தூரத்தில் என்னவன் இல்லை
முத்தமிட பார்க்கிறேன் என்னருகில் அவன் இல்லை

எங்கேயோ இருப்பவனுக்காய் நான் இங்கிருந்து தவிக்கிறேன்
நினைவுகளில் மட்டும் அவனோடு வாழ்கிறேன்

உன்னை புகைப்படங்களில் மட்டும் பார்த்து புன்னகைக்கின்றேன்
நீ இல்லாத தனிமையை ஏனோ வெறுக்கிறேன்

உன் கைகோர்த்து நான் சாலையில் நடப்பதாகவும்
உன் தோளில் சாய்ந்து நான் உறங்கிப் போவதாகவும்
சதா கனவுகளில் நான் உன்னை காதலித்துக் கொண்டிருக்கிறேன்

உறக்கம் களைகையில் உடைந்து போகிறேன்
என் வீட்டு ரோஜாக்களில் உன் முகம் பார்க்கிறேன்
நான் சூடும் பூக்களிலும் உன் வாசம் உணர்கின்றேன்

தூரம் சில நேரங்களில் அன்பை ஆளப்படுத்துகிறது
தூரம் சில நேரங்களில் அன்பிற்காய் இயங்க வைக்கிறது

மனது சரியில்லாத தருணங்களில் உன் மடியில்
நான் உறங்கிப் போக ஆசை காயப்பட்டு
நான் கண்ணீர் வடிக்கையில் ஆறுதலாய் நீ
அணைத்துக் கொள்ள ஆசை



அதிகாலை உன் முகத்தில் நான் விழிக்க ஆசை
அந்தி மாலை என் அருகில் நீ இருக்க ஆசை

உண்மையில் தூரம் சில நேரங்களில் அன்பை ஆளப்படுத்துகிறது
தூரம் சில நேரங்களில் அன்பிற்காய் இயங்க வைக்கிறது.

கவிஞர் சாதீக் பாத்திமா சமீஹா, மூதூர் (இலங்கை)

# விடியல்

அதிகாரப்பசிக்கு இரையான
அமையூர் களிறு.
தீரா இன்னல் தந்த கூளியர்
திறவோனைஇழந்துநிற்கும் திரள்.

நெடியோன் இல்லா பொழுது
நீங்கா நினைவுப் பிழை.
உலகை சுருக்கிய சூழல்
வறியோரை சூழ்ந்த இருள்.
விடை இல்லா விடியல்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

இடைவெளிகள்
இன்பமில்லை என
நினைத்தேன் ஆனால்
இடைவெளியும்
இடத்திற்கேற்றாற் போல்
அலங்கரிக்கத் தான்
செய்கின்றன
உந்தன் அழகிய
புருவங்களுக்கு இடையில்



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# தகுதிகள்

தான் முயற்சி செய்தால் மட்டுமே
தனக்கான தகுதிகளை அடைந்திட முடியும்

தகுதி கிடைத்தால்
தன்னலமாய் செயற்படாதீர்கள்
அது உங்களை தலைகுனிய வைத்துவிடும்



தகுதிகள் வைத்திருப்பவர்களை
தலையுயர்ந்து பார்க்காதீர்கள்
தகுதிகள் இல்லாமலும் சிறப்பாக வாழ முடியும் என்று
நம்பிக்கை கொள்ளுங்கள்

தகுதிகள் பெற்றவர்கள் மட்டும்
இவ்வுலகில் ராஜாக்கள் இல்லை

தகுதிகள் பெறாமலே தன்னலமற்று
தன்னம்பிக்கையோடு தரணியில் பலர் வாழ்கிறார்கள்

தகுதிகள் நம் வாழ்வை மாற்றும் தடையங்கள்
என்று எண்ணிவிடாதீர்கள்
நற் பண்போடு வாழ்ந்தாலே நலமாய் வாழ்ந்திட முடியும்

தகுதிகளை தலையில் வைத்து கொண்டாடாமல்
தன்னலமற்று நற்பண்போடு வாழ்கின்றவர்களும் இத்தேசத்தில்
வாழ்கிறார்கள் அவர்களையும் மறந்துவிடாதீர்கள்

தகுதிகள் பெற்றாலும்
தலைசிறந்து நன் மனிதனாக வாழுங்கள்

கவிஞர் பஹ்ரியா பாயிஸ், ஹெம்மாதகம (இலங்கை)

# கல்விக்கண் திறந்த கர்மவீரர்

மண்ணிலே பிறந்த ஒளிமயமான வீரர்
ஏழைக் கண்ணீர் துடைத்தார்
சாதி, மதம் , பேதம் பார்த்திடாதவர்

ஏழைகளுக்கு கல்விக்கண் திறந்த வீரர்
மாடு மேய்க்கும் சிறுவர்களுக்கு வழிகாட்டியவர்

ஏட்டைக் கொடுத்து கல்விக்கண் திறந்தவர்
ஏட்டோடு மதிய உணவையும் கொடுத்தவர்
பாரிலே மனித நேயம் கொண்டவர்



கருப்பு காந்தி என்றே பெயர் பெற்றவர்
தமிழ் மண்ணை செழிப்புறச் செய்தவர்

கல்விப் புரட்சி பசுமை புரட்சி என வித்திட்டவர்
ஏழை வாழ்வில் விஞ்ஞானிகளை உயிர்ப்பித்தவர்

தலைவர் பதவிக்கு ஆசை கொள்ளாதவர்
கண்ணியம் மிகுந்த தலைவரே அவர்

கல்லாதவர் கற்றிட பள்ளிகளை அமைத்தார்
நீர் நிலைகளை கட்டி அமைத்தார்

கல்லாதவர் என்றாலும் கல்விக்கு வழிவகுத்தார்
கறைபடியாத உள்ளம் வெள்ளை உள்ளம் படைத்தவரே

எளிமையான உடையும் எளிமை தோற்றமும் நிறைந்தவரே

மக்கள் மனதிலே நீங்க இடம்பிடித்த உத்தமரே
மறைத்தாலும் மறையாமலே வாழும் வள்ளலே

கவிஞர் எச். டீ. எச் பஹீதா, கொழும்பு

# குழந்தைத் தொழிலாளர்

திறமை அறியாது திரிந்திட்ட முன்னோர்கள்
அருமை அறியாது  அடையாத கல்வியால்
வறுமையின் பிடியில் வகையின்றி சிக்கியதால்
எறும்புத் தலையில் ஏற்றிய இளநீராய்
அரும்புப் பருவத்தில் ஆயிரமாம் தொழிலாளர்கள்
புத்தகம் திறக்கும் பூக்கரங்கள் எல்லாம்
பாத்திரம் துலக்கி பழுத்தே போனது
விரலிடை எழுதுகோல் விளையாடும் பருவத்தில்
தீக்குச்சி அடுக்கியே தீர்ந்தது இளமை
கனவும் இலட்சியமும் கலங்கிய கண்களில்
தோய்ந்த குழந்தைக்கு தொழிற்சாலை வேலை
இன்றைய பசிக்காய் எதிர்காலத்தை  இழந்திடும்
அவலம் போக்குவோம் அரும்பினை மலரச்செய்வோம்
குழந்தைத் தொழிலாளர்  நிலையை ஒழுப்போம்
சமூக மாற்றத்திற்கு வழியினை  வகுப்போம்



கவிஞர் அ. தனசேகரன், அருள்வாடி


பார்த்து பார்த்து காத்து இருந்தேன்
நீ வருவாய் என நினைத்தேன்
காதல் பரிசு கொடுத்த முத்தத்துடன்
மௌனராகம் பாடி நின்றேன் நான்
ஜோடி சேர காலம் எப்பொழுது
வாரணம் ஆயிரம் ஆயிரம் கனவுகள்
என்னைத் தாலாட்ட வருவாளா காதலி
பிரியமானவளே இதயத்தின் உள் நுழைந்து
கண்ணாடி பூக்கள் போல உடையாமல்
வசந்த மாளிகை தந்த என்னவன்
மன்னன் போல காட்சி தந்து
முதல் மரியாதைக் கொடுத்து அணைத்தான்



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# புலம்பெயர் வாழ்வு

காட்டின் பசுமை
கதகதப்பான வெப்பம்
கூட்டின் காப்பு
கூட்டமாய் வாழும் ஆனந்தம்
தென்றலின் ஸ்பரிசம்
தேவகானமாய் உயிர்கள் ஓசை
அந்தோ மனிதன் வந்தான்
அத்தனை இன்பமும் இழந்தோம்
ஆதார வனத்தை அழித்தான்
அழகிய கூட்டினைக் கலைத்தான்
வேறு வழியின்றி வேறாகி
வீடொன்று தேடி வந்தோம்
வெப்பக் கதிரும் தாக்க
வேதனை நெஞ்சில் கோர்க்க
வாழ்ந்திடத் தானே ஆயுள்
அதனால் விரிசலுடன் குடியேற்றம்



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# ஒளிவிளக்கு

என் மனதில் இருந்த,
கவலை என்னும் இருளை,
நீக்கிய "ஒளி விளக்கு "
நீயே.



கவிஞர் பெ. சுரேகா, திண்டுக்கல்

மொழிகளின் தேசத்தில்
அவள்
என்றும் மாறாத
புன்னகை.
*
புன்னகைக்கும் ஒவ்வொருவரும
ஏதோ ஒரு வகையில்
அன்புள்ளவர்களே
அல்லது
அன்பிற்கு பாத்திரமானவர்களே
*
ஆயிரத்தெட்டு பறவைகள்
பறந்தாலும்
குருவிகளுக்கு மட்டும்
வீடுளில்
கிடைத்து விடுகிறது
எளிதில் கூடு
*
காலையில்
எழுந்ததும்
"அப்பா
இந்த குருவிக் கூடு
நான்தான் கட்டினேன்
குருவி தான் இன்னும் வரவில்லை "
என்று
முதல் குற்றப்பத்திரிக்கையை
குருவி மீது தாக்கல் செய்தான் மகன்



கவிஞர் இரா. மதிராஜ்

# காதல்

அன்பின் அழகான மொழி காதல்
சத்தங்களின் மௌன மொழி காதல்

எழுத்துப்பிழைகளே இல்லாத அழகிய
இலக்கணம் காதல்

பாசத்தின் எச்சங்களை தின்ற
மிச்சங்களாய் காதல்

காமத்தின் இதழோர புன்னகையின்
நீர்த்துளிகளாய் காதல்

சாதியின் வேர் அறுக்கும்
மொட்டுக்களாய் காதல்

மதங்களின் சூறாவளியில் மாலைநேர
தென்றலாய் காதல்

மனிதம் மறந்த மனித கூட்டத்தில்
மகாத்மாவாய் காதல்

ஆதலால் காதல் செய்வீர்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# தென்றலே

பூங்காவனத்தில் அலைந்தே
பூமித்தாயின் வசந்தத்தில்
பூகோளத்தின் உயிராய்
வலம்வரும் தென்றலே.

தொலைதூரம் நடந்தே
தொல்லைகள் கடந்தே
தொட்டிடும் பூங்காற்றே
தொலைந்து போனதெங்கே?

என்னைத் தொட்ட
எழிலான காற்றே.
என்னவனையும் சூழ்ந்தே
எழுச்சிக்கு விரட்டிடாயோ?



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# குழந்தையோடு குழந்தையாய்

காகிதக்கப்பல் செய்யும்போது
மழைவிட்டபின் மரத்தை உலுக்கி மறுமழை

பெய்ய வைக்கும்போது
கடலில் கால் நனைக்கும்போது

ஊஞ்சலில் உற்சாகமாய் அமரும்போது
பஞ்சுமிட்டாய்க்காரன் மணி அடிக்கும்போது

சோப்புநுரையில் குமிழ்கள் தயாரிக்கும்போது
ஒளிந்துவிளையாடும்போது
சிறுநீர் கழிக்கும் உணர்வு வரும்போது

என் குழந்தை மனது
இறந்துவிட்டதென நினைத்தேன்.

நான்தான் புதைத்துவிட்டேன் என்பதை அறியாமல்.



கவிஞர் பானு அப்துல்லா

# அவளின் இடை

தேடித் தேடிப் பார்த்தேன் என்
தேடல் எதுவும் கிடைக்கவில்லை,
உன்னில் என் தேடல் உள்ளதா
என்று எனக்கு தெரியவில்லை,
எடையில் மிகச் சிறியது
உன் இடை, இதை
உன் நடையில் உணருகின்றேன்.



கவிஞர் க. வீரபாண்டி, புளியங்குளம், (மதுரை)

பங்கஜம் அக்கி வெந்தழல்க்கிரையாக
ஜலஜம் அம்போருகம் நாமம் ஒரிஈ
ஜடம் நாமம் தழிஈ அம்புஜம் விதவை நாடாள
வாரிஜம் கரையொதுங்கி
காற்றோடு கண்ணீர் மாலை பூண;

சங்கோஜம் என உருக்கம்
காணும் மானுட விழிகளிற்கு வஞ்சனை என்ன?

ஓர் சோற்றுப்பருக்கை ஈன மனம்வரா
குணமகள்கள் கானல் கண்ணீர் வடித்தனர்



அந்தோ அவலம்!
பரிதாபகிணற்றில் பரி பதுங்க
திரிதல் என்ன இங்கு புது ஜனனம்
திகைப்புத்தான் இம்மகுடம்.

கவிஞர் கவியின் பேதை

# ஆசீர்வதிக்கப்பட்ட சொற்கள்

அனைவருக்கும் பொதுவானது
சொற்கள்
சிலர் மென் சொற்கள்
பேசுகிறார்கள்
வேறு சிலர் கடுஞ்சொற்கள்
உதிர்க்கிறார்கள்
மற்ற சிலர்
மௌனமாக இருக்கிறார்கள்

தன்னிச்சையாக எழுந்து பறக்கும்
இலவம்பஞ்சு போலான
சொற்கள் மட்டும்
மிகவும் இயல்பாக
மற்றவரை நோக்கி எழுந்து
உருகி வழிந்து
காற்றின் போக்கில்
விருப்பம்போல அலைந்துவிட்டு
மெல்ல மெல்ல
ஆனந்தத்தை அடைய செய்கிறது.

மற்றவர்
மன பாரத்தை கரைக்கும்
நகைச்சுவை தேன் கலந்த
சொற்களை பேசுபவர்கள்
ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக
இருக்கிறார்கள்.



கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

அறம் வளர்க்க
ஆயுதங்கள் ஏந்தி
இளைஞர்களே இணைந்து வாருங்கள்
ஈட்டியின் கூர்மையுடன்
உலகம் உன்னுடன் நடக்க
ஊன்றுகோளாய் உமது சிந்தனைகள்
எரிமலையின் எரியும் கனலே
ஏகலைவன் உன் குறிக்கோள்
ஐயம் என்பதோர் நோய்
ஒற்றை இழப்பின் திறவுகோல்
ஓராயிரம் விளக்கேற்றி
ஔவைத்தமிழை ஒளிர வைக்க
எழுந்து வா இளைஞனே
எல்லாம் முடியும் உன்னால் மட்டுமே
வெற்றிகளெல்லாம் காத்திருக்கின்றன
உன் வரவை நோக்கி
எழுந்து வா இளைஞனே
எல்லாம் உன் வசம்



கவிஞர் பெ. தனலட்சுமி, ஈரோடு மாவட்டம்

அனல்காற்றுவீசும் பாலையில்
பழுத்திருக்கும் இல்லத்து பேரிச்சைமரம்
வாருங்கள் உணவுதேடும் குருவிகளே!

தண்டவாளத்து பூச்செடி
வந்தேபாரத் ரயில் கடந்ததும்
மீண்டும் வானம்நோக்கி.



கவிஞர் ஸ்ரீனி. முத்துவேல், துபாய்

# விடியலைத் தேடி

விடியலைத் தேடியே ஓடிடும்
விந்தை மிகுந்த மனிதா
இன்னுமா விடிய வில்லை
வியப்பு மேலிடவே கேட்கிறேன்.

அன்னையின் கருவில் உருப்பெற்ற
அந்த நிமிடமே உனக்கான
விடியலும் துவங்கி விட்டது
இன்னுமா தூங்குகிறாய் விழித்தெழு.

உனக்கான உலகம் பரந்தது
சிறகு விரிக்கத் தடையேது
சிந்தனை செய்திடு நாளும்
அதுவே உலகை ஆளும்.

வண்ண வண்ணக் கனவுகள்
வருடம் முழுதும் காணலாம்
வகை வகையான நினைவுகளால்
என்றும் உலகை ஆளலாம்.

துடிப்பு மிக்க இளைஞனாய்
தூக்கிப் பிடியுனது கரங்களை
ஆக்கி வைத்த சோற்றையெல்லாம்
ஆறப்போட்டு அப்புறம் சாப்பிடலாம்.

சாதிக்க பிறந்த உன்னை
சோதிக்கும் திறன் இவ்வுலகில்
எவருக்கும் இல்லை என்ற
இருமாப்பை கைவிடாதே என்றும்.



விடியல் வெளியில் இல்லை
உன்னுள் இருக்கும் புதையலை
வெளிக் கொணர இன்னொருவர்
தேவையும் வேண்டுமா உனக்கு.

கவிஞர் கவி. செங்குட்டுவன், ஊத்தங்கரை

# தீராக் கதைகள்

சிலந்திக்கூடுகள் தோரணமான
சிதிலமடைந்த பூர்விக வீடுகள்.

கிராமங்களில்
பேச்சுத் துணைக்கு ஆளின்றி
வெறிச்சோடிய
வீட்டுத் திண்ணைகள்.

தெருக்கோடியில் கேட்பாரற்று
வீற்றிருக்கும் அரிவாள் ஏந்திய
எல்லைச்சாமிகள்.

முடிவறியா கானகத்தில்
தன்னந்தனியாக நீளும்
ஒற்றையடிப் பாதைகள்.

தன்னையறியாமல்
கண்ணீரை வரவழைக்கும்
செல்லரித்த நிழலுருவாய்
புகைப்படச் சட்டங்கள்.

தூரங்களை விழுங்கிச் செல்லும்
நெடுந்தூரப் பேருந்து பயணங்களில்
தாலாட்டாய் தலைவருடியோ
துக்கமாய் தொண்டையடைத்தோ
கடந்து செல்லும்
இசையேந்திய தென்றலும்.



வார இறுதியில் பாட்டியின்
கோழிக்குழம்பிற்குச்
சுவை கூட்டும்
அஞ்சறை பெட்டிகள்.

உணர்வுகளின் ஒழுங்கற்ற
கோட்டுருவங்களாய்
முகம் காட்டும்
முகப்பு அட்டைகள்.

தொடர்ந்த வண்ணத்தூரிகையின்
ஓவியமாய் விரியும்
அடுப்பங்கரை இளம் கன்னியர்.

வாழ்வின் வலிகளை
பொக்கைவாய் புன்னகையின் பின்னே
மறைத்துக் கொள்ளும்
ரேகை படர்ந்த முகங்கள்.

இன்னும் பேசித்தீர்க்க
முயலுகின்றன
வாழ்வின் தீராக்கதைகளை
அரிக்கன் விளக்கின்
அருகாமையில்.

கவிஞர் கீர்த்தனா பு திருப்பூர் மாவட்டம்

# என்ன செய்யப் போறீங்க?

என்ன செய்யப் போறீங்க?
என்ன செய்யப் போறீங்க?
உலகின் மூலை முடுங்கெங்கும்
ஒலிக்கும் உன்னதக் கேள்வி
என்ன செய்யப் போறீங்க?

உதாரணத்திற்கு ஒன்று
கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராய சாவு
எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க
ஆவேசமாக, அழுகையாக, ஆதங்கமாக
ஆயிரம் குரல்கள் ஒலிக்கின்றன.
என்ன செய்யப் போறீங்க?
அடுத்தொரு பிரச்சினை வரும் வரை ஒலிக்கும்
பிறகும் ஒலிக்கும்; அடுத்தப் பிரச்சினைக்காக.

இப்படித்தான்
மண் தொட்டு வான் வரை மாசுக்கள் பெருக்கம்
கொலை, கொள்ளை, கற்பழிப்பு
ஏமாற்று, பொய், புரட்டு
குடும்பத்திலும், அரசியலிலும் பின்னிடும்
சூழ்ச்சி வலைகள் என
அநியாயங்களைக் கண்டதும் குருதி பொங்கிட,
நரம்புகள் புடைக்க ஒலித்திடும்
குரல்வளைகளின் ஒலிகள்.
நியாயம் கிடைக்கும் முன்பே
மெல்ல மெல்ல  அடங்கிப் போகின்றன
அல்லது மறக்கடிக்கப்படுகின்றன
என்ன செய்யப் போறீங்க ?



கேள்வி கேட்பது எளிதுங்க
அதனால் தானோ என்னவோ எதற்கெடுத்தாலும்
கேள்விகளை மட்டுமே கேட்டுக்
கொண்டே இருக்கிறோம்.
பதில் வருகிறதோ இல்லையோ
விடை தெரிகிறதோ இல்லையோ
கேள்விகள் கேட்பதே நம் உரிமையென,
கேட்டுக் கொண்டே இருக்கிறோம்

சுட்டு விரலை நீட்டாதீர்கள்
மூன்று விரல்கள் உங்களை நோக்கி
தேர்தலுக்கு முன் பட்டியலிட்டு விட்டு
பின் வாகாய் மறந்து விடும்
அரசியல்வாதிகளின்  வெற்றுப் பேச்சாக இல்லாமல்
என்ன செய்யப் போகிறோம் என்றே சிந்தியுங்கள்
இணைந்த கரங்களுக்கே வலு அதிகம்
நிச்சயமாக வெல்வோம்

கொசுறாய் ஒன்று
அப்பாடா... இதோ
என்ன செய்யப் போறீங்க
சுட்டு விரலை நீட்டி விட்டேன்
இனி அவர்கள் பாடு
கடமை முடிந்தது.
என்னை நோக்கும் மூன்று விரலை
பார்த்தும் பார்க்காமல் அமர்கிறேன்
இதுவே மனிதனின் முகமூடியற்ற மனநிலை

கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு, பட்டாபிராம், சென்னை

# தாய்மை

என் மகள் அவள்
என்னவள்
நித்திரை மேதினியில்
நிசப்தமாய் துள்ளிட

தூராத மேகத்தில் அமர்ந்தே
தூரிடும் முளரி இதழின்
நடுவில் புன்னகையால்
பூவுலகம் மறை(ற)க்க செய்பவள்

பொங்கிடும் பேரானந்தத்தில்
விழி மூடிய அவளின்
வதனத்தில் மூச்சும் தொடாத
முத்தம் பகிர்கிறேன்

மாரோடு சுரக்கும் தாய்ப்பால்
போன்ற தூய்மையானவளே
துயிலும் போதிலும்
நகைக்க யார் கற்றுத்தந்ததோ

என் தேவதை அவள் உறங்குகிறாள்
பாதம் நோகுமோ என
கரம் பதித்தே பிசைகிறேன்
எண்ணெய் சிந்த

தவழ்ந்து தவழ்ந்து நடை கற்றவள்
ஓயாத ஓட்டம் நின்று
ஓய்வில் கிடக்க மீண்டும்
எழும் முன் ஏராளமாய்
கடமைகள்



கொஞ்சியே இரசித்திட
ஆசைகள் ஆயிரமாயிரமாய்
கயவன் வயிறும் பசிக்குமே
தீராத சுமை முதுகில் சுமக்க

மழலையின் முறுவலில்
முன்னேறிட கனவுகளின் இடையில்
நானும் துயில்கிறேன்
என்னவளுடனும்
என்னவனுடனும்.

கவிஞர் சு. கார்த்திகா, பழனி

# எழுந்து வா பெண்ணே

காற்றுக்கு எல்லையில்லை
கடல் அலையையும்
கடந்து செல்லும்

நதிக்கு முடிவில்லை
ஜீவனாய் அது ஜீவித்து செல்லும்
வெள்ளப்பெருக்கு அணையையும்
அடித்து செல்லும்
அதுவென நீயும்

இடியென வானம்
பிளந்து வா
செடியென மண்ணை
செதுக்கி வா பெண்ணே

தடைகளை தளர்த்தெறி
பயத்தினை உடைத்தெறி
தனித்துவம் படைத்துணை
தனிமனிதன் செயலறி

தடைகள் உனக்கு உண்டு
தளர்த்தெறியும் பெண்மையாய்
தளர்த்தினில் உணர்த்திடு
முயற்சியால் முன்னேறு
முட்டுக்கட்டை உனக்கில்லை
முழுமனதோடு எழுந்து வா
வானமும் பூமியும் உன்னை
வரவேற்க காத்திருக்கு



கவிஞர் பரிமளா மணி, தியதலாவ, இலங்கை

# தென்றலின் கரம் பிடித்து

தென்றலின் கரம் பிடித்து
தேவனை துணைக்கழைத்து
தேசிங்கு ராஜன் குதிரையில்
பூமியை வெல்ல புறப்படுங்கள்

சொல்லுக்கு பொருளாக
செயலுக்கு இலக்கணமாக
மழைக்கு குடையாக
பசிக்கு உணவாக

இருவரும் இணையாக
கை கோர்த்து மெய் சேர்ந்து
உள்ளன்பு பொங்க
உலகை விலை பேசுங்கள்

வீணையும் நாதமுமாக
குழலும் இசையுமாக
மலரும் மணமுமாக
மகிழ்ச்சி பரப்புங்கள்

புதிர்களை அவிழுங்கள்
பிரச்சனைகளை வதம் செய்யுங்கள்
எதிரிகளை புறந்தள்ளுங்கள்
நண்பர்களை துணை கொள்ளுங்கள்

அறத்தின் வழி நில்லுங்கள்
புதிய பொருள் காணுங்கள்
இன்பத்தில் திளையுங்கள்
வீடு பேறு கிட்ட வினையாற்றுங்கள்



நிலவும் சூரியனும்
தென்றலும் புயலும்
வறுமையும் செல்வமும்
ஒன்றென கொள்க! பொருது வெல்க!

வான் வாழ்த்தட்டும்
வளம் பெருகட்டும்
மகிழ்ச்சி பரவட்டும்
மனம் குளிரட்டும்

வான் பொழிய
மண் பயனுற
வசந்தம் பூக்க
வாழ்க்கை இனிதாகட்டும்

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# உனக்காய் எழுதுகிறேன்

உயிரோடு உறவானாய்
உலகே நீ எனக்கானாய்
உறவுகள் எல்லாம் சுற்றியிருக்க
உள்ளத்தில் சுற்றுலா வருகிறாய்

நீ தந்த முத்தங்கள்
வென்றன ஆயிரம் யுத்தங்கள்
மூச்சடைத்துப் போன முத்தங்கள்
நாள் கடந்தும் நகரா சத்தங்கள்

என்ன சந்தேகமா உனக்கு
என்னை உனக்கு
எவ்வளவு பிடிக்கும் என்று
அடிக்கடி கேட்கிறாய் ?

உன்னைத்தான் நான்
தினம் தினம்
புதுப்புது நாவலாய்
தேடித் தேடிப் படிக்கிறேனே
புரியாதா உனக்கு!

உன் விரல்கள் மீட்டிங்
வீணையாய் மாறுகிறேனே
ராகங்கள் பதினாறும் இதழ்களால்
மீட்டுகிறேனே
இன்னுமா கேட்கிறாய்?

ஆழ்துயிலில் சிறு குழந்தையாய்
உனைப் பிடிக்கிறது.
அணைப்பில் அன்பின் பிணைப்பாய்
உன்னைப் பிடிக்கிறது.
இது போதாதா ?



உயிர் மூச்சிருக்கும் வரை
உனை நேசிப்பேன்
வாழ்ந்திருக்கும் வரை
வாசகியாய் வாழ்த்துக்களோடு
உனை அணைத்திருப்பேன்.

வலிகள் ஆயிரம் தந்து
நீ விலகித்தான் சென்றாலும்
நீங்காத சோகங்கள் தான்
நான் கொண்டாலும்
வானளவு உனை நேசிக்கிறேன்
சந்தேகம் வேண்டாம்.

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ், கம்பளை

# அழகு

குமரியென்றாலே பேரழகுதானே
குங்குமம் வைத்த நெற்றியழகு

குச்சிப்பிடி இடையழகு
குஞ்சம் வைத்த சடையழகு

குறுகுறு பார்வையழகு
குடம் தூக்கும் நடையழகு

குணவதியாக தெய்வீக அழகு
குதிகால் அணியும் கொலுசு அழகு

குபீரென்ற இளஞ்சிரிப்பு அழகு
குழி விழும் கன்னம் அழகு

கும்மிருட்டில் பயம் அழகு
குமுதவாய் உதட்டழகு

குரலோசையில் பேச்சழகு
குலு குலு மகிழ்ச்சி அழகு

குவிகின்ற கரம் அழகு
குற்ற வேளையில் திருதிரு பார்வை அழகு

குறிப்பாக செய்யும் வேலை அழகு
குளிர்கின்ற வேலையில் கோலமழகு

குழந்தையிலே பேரானந்த அழகு
குமரிப்பருவம் தான் அழகோ அழகு!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# கறைபடாத கரங்கள்

பொதுநலத்தின் தலைப்பிள்ளையென தன்னை ஒப்படைத்து
தேசத்தின் விடுதலைக்காக சிறையில் உறவாடி
கல்வியைப் பெறாமலே அனுபவங்கள் பெற்றே
தமிழகத்தின் தலையெழுத்தை சிறப்பென எழுதிட
அரசியலை ஆயுதமாக்கி உழைப்பைக் கூட்டி
ஆலைகளும் கல்விச் சாலைகளும் கட்டி
கல்லாதோர் நிலைமையை இல்லாது மாற்றிட
இலவச உணவும் ஏற்றமிகு சீருடையும்
புத்தகமும் வழங்கி புதையலெனக் கல்வியை
சிறாரின் மனங்களில் சீர்மிகு பொறுப்புடன்
கடமையைக் கண்ணெனக் கொண்டு நாளும்



கவனத்தில் நல்லதோர் பொருளை ஈட்டி
பசுமையைப் பரப்பிட அணைகளைக் கட்டி
உழவைப் பெருக்கி ஊருக்குச் சோறிட
தொழிற்சாலைகளின் ஓட்டத்தில் வறுமையை விரட்டி
ஆறுகளின் போக்கில் அற்புதம் நிறைத்து
தூய்மையென நிர்வாகத்தில் கண்ணியம் காட்டி
தொடர்ந்திடும் தேசத்தின் வளர்ச்சியில் நின்றே
மக்களின் வாழ்வை மாற்றிடும் தருணங்களை
தன்னலத்தைத் துறந்தே தன்னையே வழங்கி
தமிழகத்தின் முகவரியை தரணியில் சேர்த்து
தலைநிமிர்ந்திட வைத்திட்ட கறைபடியாக் கரங்களில்
கர்ம வீரராய் வாழ்ந்திட்ட காமராசரின்
கடமையையும் கண்ணியத்தையும் வணங்குவோமாக.

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்காபுரம்

# மாறிடு சமூகமே

ஏழைகளுக்கு உதவிடுவர்
உதவியதை ஏலத்தில் விற்றிடுவர்
நாலுபேருக் கீந்ததை
நாலாயிரம் பேர் முன்னாடி
நயமாகப் பேசியே,
படம்பிடித்துக் காட்டிடுவர்
என்று மாறும் இவ் இழிநிலை
சமூகமே மாறிடு

முதுமையில் முடங்கியிருக்கும்..
மூத்தோர் பெற்றோரை
முகங்கொடுத்து அரவணைக்கத்
தயங்கிடுவோர் பலருளரே
சிறுவயதில் எமக்காக
சிரமேற் கொண்டு செய்தவைகள்
சிந்தையில் தெளியவில்லையா
சிந்திக்கும் திறனில்லையா
சமூகமே மாறிடு

அண்டை வீட்டாருடன்
அடுப்படிச் சண்டைகளால்
அடிக்கடி தொல்லைகள்
தொட்ட பட்டதுக்கெல்லாம்
தொடர்கிறதே
அழிச்சாட்டியமாய்
அறிவிருந்தும் அறிவிலியாய்
நகரும் இந்நிலை
என்றுதான் மாறுமோ
சமூகமே துணிந்தெழு

இவ்வுலக லாபத்தை
இதயத்தில் நிலைநிறுத்தி
ஏமாற்றி விற்போரால்
ஏமாறுவோர் ஏராளம்
கஞ்சிக்கும் வழியின்றி
கடைகடையாய் அலைவோர்கள்.
கண்களில் படவில்லையா.
கஞ்சத்தனம் தான் தேவையா
உன்னை நீ மாற்றிக் கொள்ளாதவரை
உலகம் தான் மாறிடுமா



பலநூறு கவியரங்கம்
பல்லாயிரம் சொற்பொழிவுகள்
பாரினிலே அரங்கேற்றிடினும்
பக்குவப்படுவோர் மிகச் சிலரே
சமூகமே மாறிடு.
மானிடனை வாழவிடு

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹார், இலங்கை

# தோல்விகளை வென்றிடு



விண்ணுலகை தொட்டுப்பிடிக்க
விண்மீனுக்கு எதற்கிங்கு ஏணி?

துயரத்தோடு துவண்டுபோக
துரும்பென்று நினைத்தாயோ

இரும்பாய் உயர் நெஞ்சம் கொண்ட
வீரப்பெண்குலம் நீ
துணிந்தெழு பெண்ணே

அன்புக்காக கையேந்த யாசகர் அல்ல நீ
கொடூரமான கண்களுக்கு கொஞ்சமும் அஞ்சாதே

உலகை அறிந்திருந்தும்
கைபேசியின் அறையினிலே சிறைப்பட்டு வாழாதே

சிறப்பான கனவுகளும் சின்ன சின்ன துண்டுகளாய்
சிதைப்பட்டு போய்விடும்

சிறந்திங்கு வாழ்வதட்கு சிந்தையில் கல்வி வேண்டுமிங்கே

தோல்விகளை வென்றிட்டால் தொலைத் தூரமில்லையே
உன் வெற்றிவாகை

கவிஞர் ஷரீஸ்னா ரியாஸ், ஹெம்மாதகம

இரக்க மனம் என்பதெல்லாம் மனித வாழ்க்கையில்
இதயம் உள்ள மாந்தரின் புனித குணம் இரக்கமே!



உயிர்களிடத்தில் இரக்கம் காட்டி
உண்மையான அன்பு காட்டி
உரிமையுடன் பழகும் மனிதன்
பாசத்தின் எல்லை அவன்.

அன்னதானம் என்ற பெயரில்
அனு தினமும் விளம்பரமாய் வாழும்
போலி மனிதர்களும் வாழும் நிலையும் உள்ளதே.

அன்பான செயல் ஒன்றே மருந்தாகவும் இருக்கும்
நல்ல வாழ்த்தாகவும் இருக்குமே.

பிறரின் துன்பத்தைக் கண்டு இறங்குவதும்
அதை நீக்குவதும் நல்ல மனித நேயபண்பு
அதுவே தெய்வீக பண்பு.

அன்பான குணம் கொண்டு இயலாதவரின் துன்பத்தில்
இயன்றதை செய்யும் மனம் *தெய்வம் வாழும் மனமே!

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# எளிதல்ல



பிறப்பும்-இறப்பும் ஆயுளின் அளவுகோலாய்
மனிதனைப் பதம் பார்த்திடும் வாழ்வு தனில்
சுகங்களும்,சுமைகளும் வருகையில்
எண்ணம் போல் வாழ்க்கையென வாழ்ந்திட,
கொடுப்பனவுகள் யாவும் எம் வசமாவது அத்தனை எளிதல்ல

இன்பம் மட்டுமே வாழ்வாகிட வேண்டுமென வேண்டி
துயர் தனை ஏற்றிட முடியா மனதோடு,
காலக் கண்ணாடியின் சுழற்சியுடன் சினம் கொண்டு
தன்னிலே மனம் தனை திடப்படுத்தி
மறு நகர்வு நோக்கி அடி வைப்பது அத்தனை எளிதல்ல

எதிர்பார்ப்பெனும் கற்பனை உலகினுள்ளே
பெறுமானம் அறியா நம்பிக்கை வைத்து
ஏமாற்றமெனும் எதிர்மறைக்குள் முகங் கொடுக்கையில்,
நொறுங்கும் உள்ளம் தனை அதன் இயல்பிற்கு மாற்றிட முயன்று
மீதமான பாதைக்காய் தன்னைத் தயார்படுத்தலொன்றும் அத்தனை எளிதல்ல

அன்பெனும் அரணிற்குள் தஞ்சமாகி
யாதும் அவ் அன்பின் வழியென எண்ணி
அறிவுக்கண் மறைக்க மதியிழந்து
துரோகத்தின் விளிம்பில் தரிக்கப்படுகையில்,
அன்பின் நினைவலைகளுக்கு முற்றுப்புள்ளி இடுவது அத்தனை எளிதல்ல

கனவெனும் காலத்தின் அடைவிற்காய்
பொறுமையின் மடியில் தவழ்ந்து
தியாகத்தின் பிடிக்குள் சிக்குண்டு
நிராகரிப்புக்கள் பலவற்றைத் தாங்கிக் கொண்டு
கனவு தனை நனவாக்கிடலொன்றும் அத்தனை எளிதல்ல

அறிவுரைகள் ,அக்கறைகள் என யாவற்றின் சாயலிலும்
முழு மனதோடு பின்னிப் பிணைந்து
உரிமையின் தொனியிலுள்ளோரை எதிர்த்திட முடியாது
தமக்கான தனித்துவம் தனில் இயங்கப் போராடி
வாழ்வதனை வென்றிடலொன்றும் அத்தனை எளிதல்ல.

கவிஞர் ஹாஸ்மியா தாஹா, கெக்கிராவ-கலாவெவ

ஆகச்சிறந்த
மேதைகளை
தொலைத்து விட்டன
கைபேசிகளில்
பொருத்தப்பட்ட
தெருவிளக்குகள்



நீண்ட நாள்
ஆசை
விலை கொடுத்து
வாங்கினேன்
புத்தர் சிலை

கத்தும்
கிணற்றுத் தவளை
காலமெல்லாம்
வழுக்குகிறது
மழையில்

பாலைவனமாகிய
சமுத்திரங்களின்
சங்குகளில்
வற்றாத
கடலின் ஓசை

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# அனுபவம் புதுமை

ஏழுகடல் தாண்டி
ஏழுமலை தாண்டி,
தூரதூரமாய் நான்
கற்றாடியாய் சுற்றித் திரிந்தேன்!
வால் அறுந்த பட்டமாய்
கீழே விழுந்து மண்ணைத்
தொட்டு மயங்கினேன்!
மூச்சிரைக்க,பேச்சிழந்து
தலை சுற்றிக் கிடந்தேன்!
பறந்து சென்ற அனுபவத்தை
பரவசத்தோடு எண்ணிப் பார்த்தேன்!
வண்ண வண்ண பட்டாம்பூச்சி
வாழ்க்கை வண்ணமயமானது
என்று எனக்கு உணர்த்தியது!
மண்மாதாவோ பொறுமையை
எனக்கு எடுத்துரைத்தாள்!
வாழ்கைக்கடலில் நீந்தி வர
மீன்கள் பாடம் பயிற்றுவித்தன!
வான்மழையோ கருணையை
என்னிடத்தில் அள்ளித் தந்தது!
தன்னம்பிக்கையின் எழுச்சியை
மலைமுகடு கற்றுக் கொடுத்தது!
பரந்தவெளியோ சுதந்திரத்தின்
அர்த்தத்தைப் புரிய வைத்தது!
கற்று வந்த அனுபவத்தை
என்னூனை விளக்காக்கி
உதிரத்தை எண்ணையாக்கி
அன்பென்னும் திரி கொண்டு
அகிலத்தில் வெளிச்சம் தர ஏற்றுவேன்!
புதுமையான அனுபவமாக
அதை மாற்றுவேன்!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# வாசிப்பெனும் அமுதம்

அன்றும் இன்றும் என்றும்
மூச்சு நிற்கும் முன்பும்
முடிவின்றி தொடர்ந்து கொண்டும்
நிகழ்த்த வேண்டிய ஒன்று
அதுவே தீரா வாசிப்பு



மனதை நிறைத்து
சிந்தையை சீர்படுத்தி
எண்ணங்களை ஈடேற்றி
ஏற்றமடையச் செய்யும்
உன்னதமே வாசிப்பு

உலகத்தை புலப்படுத்தி
உண்மையை வெளிப்படுத்தி
நடைமுறையோடு நடக்கவிட்டு
நயமாய் சீர்படுத்தும்
நற்செயலே வாசிப்பு

படித்துச் சுவைத்து
பண்பைக் கூட்டி
பக்குவத்தை அளித்து
பணிவாய் ஆக்கிடும்
மகத்துவமே வாசிப்பு

அத்தனையும் தொலையும்
அனைத்தும் கைவிடும்
இன்பங்கள் குறையும்
இருந்தும் தீராது
ஒரு போதும் கைவிட மாட்டாது
வாசிப்பெனும் அமுதம்!

கவிஞர் ஷப்ரா இல்முத்தீன், அட்டாளைச்சேனை (இலங்கை)

# மலைக்காற்றே மலைக்காற்றே

வீசும் போது சத்தமிட்டு
விலகும் போது முத்தமிட்டு
கலைந்து கலந்தும் போகும்
கவிக்காற்றே.

காற்றே ஏன் கதவை திறந்தாய்
கார்கூந்தல் கலைத்து போனாய்
விழாமலே வீசிப்போகிறாய்
பூமியைத் தட்டி புரளி கிளப்பினாய்.

கிளப்பி கிலிகிலுத்து
கிஞ்சித்தும் பயமின்றி
அதிரடி ஆட்டத்தின் நாயகனே
ஆடிக்கு வருவாயோ.



வருவாய் அம்மியை நகர்த்தி
வம்பிற்கு மரம் உலுக்கி.
வருகின்ற தண்ணீருக்கு
வரவேற்பை வழங்கிடவே.

வழங்கிடும் வள்ளலே
வானவில் தோரணத்தில்
ஏழுவண்ணம் பூட்டியெழுந்து
என்ன சொல்ல வருகிறாய்.

வருவதும் போவதும்
வாழ்க்கையின் வண்ணமென்று
பூங்கதவின் தாழ்திறந்து
புதுவாசம் தூவுகிறாய்.

தூவிப்போகும் மலைக்காற்றே
தூரத்து முகட்டினிலே தூளிக்கட்டிபோடு.
துள்ளிடும் இளமைக்கும்
துவண்ட முதுமைக்கும்.
ஆசுவாசு பாலமாகி அமைந்திருக்கும் தனிமை தீர்க்கும்.

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

உறங்காத இரவின் இருட்டு
வெளிறி போனது
விடியல் .

-----------------------------------

மொழி மறந்த
வார்த்தைகள்
மௌனம்!

-----------------------------------

காலதர் வழி காற்றில்
கள நிலவரம்
அடுக்ககம் .

-----------------------------------

வண்ணங்களில் மாறுகிறது
விலையும் ருசியும்
பழச்சாறகம்.

-----------------------------------

புலம்பெயர்ந்த வாசனை
மழை கிளர்த்தும்
மண்மணம்.



கவிஞர் சாந்தாதேவி, சென்னை

# ஆடி மாதம்

ஆடி மாதம் அம்மன் மாதமே
ஆடி மாதமே ஆடி ஆடி அசைந்து வா வா
அம்மனின் மாதமே மனதை கொள்ளை கொள்ள செய்யுமே
பூச்சட்டி ஏந்தவும், பூக்குழியில் இறங்கவும் இம்மாதமே
ஆடியில் வரும் பழமொழிகளும் அபாரமே
ஆடி காற்றில் அம்மியும் பறக்குமே
ஆடிப்பட்டம் தேடி விதை
நம் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு விவசாயமே
விவசாயிகளின் உழைப்புக்கேற்ப ஊதியம் தரும்
அடித்தளமே விதை விதைப்பே
அம்மனின் அருள் பெற கூழ் ஊற்றுதலும்,
மா விளக்கேற்றுதலும் மிகச் சிறப் பே!
ஆறு, ஏரி, குளம், நதிகள்
நிரம்பிடவே மழை தருபவளே
நீ வரம் தரவே வாருமம்மா!
வேப்பிலையின் மகிமைனாலே
தீராத நோயும் தீருமே உன் மகிமைனாலே!



புற்றிலும் குடிகொண்ட அம்மனே
பில்லி, சூனியம் நீக்கி சுகத்தை தரும் சூத்திரதாரியே
உடுக்கையும், பம்பையும் உன் இசையே
ஆடி மாதத்தில் பூரம் நட்சத்திர திருநாளில்
அவதாரம் செய்த ஆண்டாள்
ஆண்டவனையே மனம் புரிய தவம் கிடந்து மணந்தாளே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# இனியவளே!

உனது வருகையை எதிர்பார்த்து
எனது இதயமும்
இசை வாசிக்கிறதே!
நீ
பூவாய் தோன்றயில்
எனது இதல்களும்
பூத்து குலுங்குகிறதே!
உனது மெல்லிய
நடையிணை கண்டு
எனது இமைகளும்
நடனமிடுகிறதே!
நொடி பொழுதில் கடந்து சென்றாயே
காவிய தலைவியாய்,
காத்திருக்கிறேன் மீண்டும்
உன்னை காண காவியதலைவனாய்!



கவிஞர் ரெ. மாணிக்கவேல், நீடாமங்கலம்

# தனிமனித வழிபாடு தவிர்த்திடுக

இந்திரன் அமிழ்தம்
இயைவதாயினும்
தனிமனித வழிபாடு
தவிர்த்திடுக
திணிப்பது யாராக இருப்பினும்
மறுப்பது நீயாக இருந்திடுக

குறைவிலா குறியீடுகள்
அளவிலா அடைமொழிகள்
வீதிஉலா வரலாம்
நீ வேடிக்கைப்பார்த்து
நிற்காது கடக்க

அடிப்பிச்சை இட்ட
நன்றிக்காக
அடித்தொழில் புரியும்
ஆராதகன்
தனிமனித துதிப்பாடி
தன் அறிவுகொண்டு
நெருங்க
நீ அறிவுநெறி கொண்டு
விலகுக



உடன்பிறப்பாக இருந்தாலும்
உற்றதோழனாக இருந்தாலும்
தனிமனித புகழ்பாடி
வரும் பொழுது
சொல்லிலும் செயலிலும்
வாய்மையும் இரக்கமும் இராது
ஆகினும் நீ
தமிழ்மரபு கற்பித்த
அன்பும் அறமும்
மறவாது நடக்க

கவிஞர் கரு. ராமச்சந்திரன், அருப்புக்கோட்டை

# பாதைகள்

தடங்கலினால் தேர்ந்தெடுத்தால்
அப்பாதையோ குழப்பப் பாதை!

தடைக்கற்களை அகற்றி முன்னேறிச் சென்றால்
அதுவே வெற்றிப் பாதை

வழிநடத்தி நேர்வழியில் சென்றால்
அதுவே முன்னேற்றப் பாதை

மற்றவர்களை நல்வழிப்படுத்தி
செயல் படுத்தினாலே ஒழுக்கப் பாதை

கனவுகளைத் தேடாமல் உண்மையை தேடிச் சென்றால்
அதுவே நல்வழிப் பாதை

தோழமையான மனதுடன் நட்பு பாராட்டி
அழைத்துச் செல்வதே நட்புப் பாதை

உண்மையான பக்தியுடன் யாத்திரை சென்றாலே
அது பக்திப் பாதை

முன்னோர்கள் நமக்குக் காட்டிய பாதையோ
அறவழிப் பாதை

எப்பாதையாயினும் நல்வழியில்
தொடர்ந்து பயணித்திடு

நற்செயல்கள் புரிந்திடின்
அனைவருக்கும் நல்ல பாதைகள்
கிடைக்கும் என்பதில் ஐயமில்லை!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

வரலாற்றைப்
புரட்டி எடுத்தேன்
புளரவில்லை
மாறாக
புரண்டது
வாழ்க்கை என்ற தீபம்.



கவிஞர் ஏ. தேவராஜ், சென்னை

# துயரம் ரசிப்பு

இரு குடும்பம் ஒற்றுமையாய்
இருப்பதனை கண்டு
கோள்மூட்டி கெடுத்து விட்டால்
கொடியவள் தான் அன்று
கெடுத்ததினால் பிளவு பட்ட
குடும்பம் தனை கண்டு
மனநிறைவு கண்டுவிட்டால்
மாயவள்தான் இன்று
முன்னாள் அவள் பேசிடுவாள்
முகம் மலர அன்று
பின்னால் அவள் திரிந்திடுவாள்
புறம் பேசி இன்று
தனக்கு வரக் காத்திருக்கும்
தண்டனையை மறந்து
பார்ப்பவர் தன் கண்களுக்கு
பத்தினி போல் நடந்து
தன் துயரம் அனைத்தையுமே மறந்து
பிறர் துயரம் படுவதனை ரசித்து
மாதாவின் கெடுதியினால்
சேய்கள் தடம் புரண்டு
மறுமையிலும் நரக சித்தியோடு
செல்ல வேண்டும் அங்கு.



கவிஞர் நூருல் பாத்திமா

# ஒன்றுபட்டால் வாழ்வே

ஒருவனுக்கு ஒருத்தி யென வாழ்
தன்நிலை மாறா தன்னம்பிக்கையுடனே வாழ்
சிறு செயலுக்கும் நற் சிந்தனையுடனே வாழ்
பன்னாடு சென்றாலும் பண்புடனே வாழ்
கட்டுக்கட்டாக பெற்றாலும் கண்ணியமாக வாழ்
விடா முயற்சியுடன் வெற்றியாக வாழ்
சொல் அச்சொல்லின் வண்ணமே வாழ்
வாக்கு தவறாமல் வாழ்கையை வாழ்
இவ்(ல்)வாழ்வே சிறந்த வாழ்வென வாழ்



கவிஞர் மு. கவிபாலன் (எ) மு. சோமசுந்தரம், சிதம்பரம்

# பெண்ணை

தொடுவது சுகமா தோளில்
சாய்வது சுகமா இல்லை
பார்ப்பது சுகமா மேனி
படுவது சுகமா கட்டித்
தழுவுதல் சுகமா கட்டிலில்
அணைப்பது சுகமா குரல்
கேட்பது சுகமா முத்தம்
கொடுப்பது சுகமா மணம்
முடிப்பது சுகமா இல்லை
மாதரை மதிப்பது சுகம் என்பேன்
சமமாய் நடத்துதல் சுகம் என்பேன்
பெண்ணை வணங்குதல் சுகம் என்பேன்.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# குடை

நிழல் தேடும் வெயில் போல
குடைத்தேடும் மழைப்போல
அனல் அனைக்கும் அருவிப்போல
முகவரி தொலைத்த முகிலினமாய்
நானுமாகிறேன்

உன்னை வடிக்க தலைப்பொன்றை தேடி
நேரத்தை விட்டு விட்டேன்
என்னுள் துடிப்பென ஊரிப்போன கவிதையே

என்னை விட்டு தொலை தூரமாகி போகாதே
காவியமாய் என்னுள் என்றுமிருந்து விடு

என்அடையாளமாய் அடைக்கலம் தந்து விடு
உடலில் ஓடும் இரத்தக்குருதி போல
என்னுள் நீயும் பரவிக்கெட
சிந்தையெங்கும் சிலாகித்து கிட

தேசம் மாறினாலும் தோசம் சேராதிரு

கவிதையே காவியமே
என்னில் நீ
உதிரமே
தேன் பூவில் மொய்க்கும் ஈக்கல் போல
வெற்று காகிதத்தில் மொய்க்கும் பேனா மைப்போல
சிந்தை மொய்க்கும் எண்ணமாய்
என்றும் என்னோடு இரு

கிடைக்கும் தருணமும்
கொடுக்கும் நேரமும் உனக்காக தந்திடுவேனே

இன்னுமின்னும் அழகென மாற்றிடு
என்னை அலங்கரித்து விடு



கவிஞர் சஹ்னாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)

கவிதைத்தாள்

இதயத்தின் ஏக்கங்களை
கற்பனைகளை
கனவுகளை
இறக்கி வைக்க
கடவுள் தந்த காகிதம்

நட்பு

எல்லையற்ற அன்பினை அள்ளித் தந்து
கணக்கற்ற கதைகள் பேசி
சிரித்து மகிழ
இறைவன் தந்த இன்பம்!

பணம்

யாரோடு இருந்தாலும் இன்பம்
பிரிந்து செல்லும் போது
வருவது துன்பம்
அளவோடு இருந்தால்
அல்லல் இல்லை
அளவுக்கு மீறினால்
வருமே தொல்லை.

வேலை

கிடைக்கும் வரை
எட்டாக் கனி
கிடைத்த பின்
அலுக்கிறது பணி
விடுமுறைக்காக மனம்
ஏங்கும் தினம் இனி.



வேலையில்லா பட்டதாரி

தேவையில்லாத பொருட்கள்
பரணில் போடப்படுகிறது
உடைந்த கட்டில்
காலில்லா நாற்காலி
தலையில்லா பொம்மை
விரைவில் வேலை வேண்டும்
அவன் முறை வருமுன்.

கவிஞர் பி. ரோஜாராணி, தேனி

□பெரிதான காரணங்கள்
ஒன்றும் தேவையில்லை
கொசுறாக கிடைக்கும்
கருவேப்பிலை கொத்துபோல
சின்ன சின்ன காரணங்களே
போதுமானதாகிவிடுகிறது
அவளின் சிரிப்புக்கும்
முறைப்புக்கும்

□பேறுகால
அறுவைசிகிச்சையின்
அடையாளம் போல
வயல்வெளிகளை
பிளந்து செல்கிறது
நான்குவழிச்சாலை
சுகபிரசவத்திற்கு
வழியிருந்தும்

□முப்போகம்
விளைந்த நிலத்தில்
நாற்புறமும் வாகனச்சத்தம்

□ அப்பா
அங்கீகரிக்கப்படாத
அன்புக்குச் சொந்தக்கார்கள்!
அப்பா எனும்
மூன்றொழுத்து மந்திரத்தை
உச்சரிக்கும் உதடுகளுக்கு
இங்கு பஞ்சமே!

□ ஹிட்லரின் முகமூடியில்
உலாவரும் அப்பாக்களுக்குள் இருக்கும்
சார்லிசாப்லினைக் கண்டுபிடிக்க
பேரக்குழந்தைகளால் மட்டுமே முடியும்!



□ஓடிஓடி உழைப்பவர்களை
ஒப்பனையோடு பார்க்கலாம்
கல்யாண புகைபடத்தில்!

பசிக்கு உணவு,பாந்தமாக
ஒரு வண்டி,சிலநிமிட செய்திகள்,
பதினொரு மணி தேநீர்,
ஆண்டுக்கொரு சட்டை
இவையே
அவர்களின்
அதிகபட்ச தேவையாக இருப்பினும்
அயராது ஓடுபவர்கள்!

தேடிச்சேர்த்த சொத்தையெல்லாம்
பங்கு பாகம் பிரிப்பவர்கள்
மறந்தும் வெளியிடுவதில்லை
வட்டிக்கடன் போடும் குட்டிகளை பற்றி!

கவிஞர் ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன், தென்காசி

# மொழித் தடைகளை கடக்கும் காட்சிமொழி ஈமோஜி!

**(உலக ஈமோஜி நாள் ஜூலை 17)**

எண்ணிம உலகத்தில் எண்ணங்களைப் பரிமாற
உரை அரட்டைகள் இருந்தன தொடக்கத்தில்!
புத்தாயிரத்து இளைஞர்களின் உரையாடல் களத்தில்
வார்த்தைகள் சுருங்கி ஓரிரு எழுத்துகளாயின!
ஜப்பானிய கலைஞர் ஷிகெட்டா குரிடா
படவரைபுள்ளி சார்ந்த சின்னங்களின் தொகுப்பை
வடிவமைக்க, பிறப்பெடுத்தன காட்சிமொழி ஈமோஜிகள்!
ஜப்பானிய மொழியில் ஈ என்றால்
படத்தையும் மோஜியெனில் பாத்திரத்தையும் குறித்திடுமே!
கருத்துகளையும் உணர்ச்சிகளையும் திறம்பட வெளிப்படுத்தி
புரட்சிக்கு வித்திட்டன புதுவகை ஈமோஜிகள்!
தகவல் தொடர்பு உலகின் முகங்களிவை!
சிரிக்கும் முகம் தொடங்கி, ஏராளமான உணர்வுகளில்
உருவங்கள், பொருள்கள், விலங்குகள் எனும்வகையில்
ஈமோஜிக்களின் பட்டியல் நாள்தோறும் நீள்கிறதே!
எண்ணிம பரிமாற்றங்களில் ஆழம், ஆளுமை,
அனைவரையும் மகிழ்விக்க நகைச்சுவை போன்ற
மனித உணர்வுகளை எழுத்துகளைவிட எளிதாகக்
கடத்த வல்லது ஈமோஜிகள்! பிராந்தியம், மொழிகளெனும்
தடைகளைத் தாண்டவல்ல காட்சிமொழி ஈமோஜி!
உலக மக்களில் மூன்றிலொரு பங்கினர்
நிலநடுக்கத்தை எதிர் கொள்ளும் நிலையின்று!
நில அதிர்வு ஆராய்ச்சியாளர் ஸ்டீஃபன் ஹிக்ஸ்
நிலநடுக்கம் குறித்த ஈமோஜிகள் உருவாக்கல்
பேரிடரை எதிர்கொள்ள பெருந்துணை ஆகுமென்றார்!
படவரி முகநூல், கீச்சொலி, கட்செவிஅஞ்சலெனும்
சமூக ஊடகங்களின் சகாப்தமான இந்நாளில்
பேரிடர் காலத்தில் எச்சரிக்கை விடுக்க
பெருந்துணையாய் விளங்கிடும் ஈமோஜிகள்! ஐயமில்லை!
புரிதலுடன் வண்ணமயமாக எண்ணங்களைப் பரிமாறும்,
திறனுடைய ஈமோஜிகளைக் கொண்டாடுவோம் இந்நாளில்!




கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

பேருந்து வரவில்லை,
பேருந்து நிழற்குடையில் பயணிகள்
மழை வந்தது.



கவிஞர் அ. செல்வராஜ், உடுமலைப்பேட்டை

பகுதி 040 ஆண்டாள் பகுதி 010 நாச்சியார் திருமொழி பகுதி 002




மொத்தத்தில் நாலாயிர பாசுரங்கள் கொண்டதுவே!
முதலாயிர பகுப்பினிலே நாச்சியார்தம் திருமொழிதான்
அமைந்துளதே! பதினான்கு பிரிவினிலே பத்தெண்ணில்
தொகுப்பாகும்! முதல்பத்து நேர்சுவைக்க முந்துவமே!
எம்பெருமான் தன்னோடு தனையிணைக்க காமனையே
வேண்டுவதாய் முதல்பாசுரம் விளங்கிடுமே!பகவான்தன்
பக்தியினால் காணுகின்ற அஞ்ஞானம் மிக்குயர்வே!
மன்மதனின் விருப்பமான காட்டுப்பூ அவனுக்கே
இட்டனளே! முதலாவதில் காமனையும் அவனிளவல்
சாமனையும் வணங்குகிரமம் விரித்துரைத்தாள்! தைமாதம்
முழுவதுவும் வருவழியும் சேரிடமும் மெழுகிட்டு
மண்குளிர கோலமிடல் கூட்டினளே! அடுத்ததுவாய்
மாசிமுதல் பக்ஷத்தினிலே வீதிதனை நுண்மணலால்
வனப்பூட்டி அலங்கரித்து தன்னாவல் நிறைவேற்ற
இருவரையும் தொழுதுவேண்டல்! அடுத்தமைந்த இரண்டாவது
பாசுரத்தே தன்நோன்பின் கிரமமதனை விளக்கிட்டே
எம்பெருமான் தன்னோடே இணைந்திடவே வேண்டுவளே!
வீதியெலாம் கோலமிட்டு விடியும்முன் நதிமூழ்கி
முள்ளில்லா சுள்ளித்தீ நோன்புகாணல் விளக்குகின்றாள்!
தேன்கசியும் ஐமலரால் காதல்கணை நேர்தொடுத்து
எம்பெருமானை தானணைக்க செய்யும்படி காமசாமனை
வேண்டுகின்றாள்! மூன்றாவதில் நிந்திக்கா வகைநின்று
எம்பெருமான் சேர்த்திதனை நாடுகின்றாள்! நாலாவதில்
தன்வருத்தம் மிக்காதல் தெரிவித்து கண்ணனுக்கே
தானர்ப்பணம் என்பதனை சாற்றுகின்றாள்! அவனுக்கே
தனையாக்க விழைகின்றாள்! ஐந்தாவது பாசுரத்தில்
எம்பெருமான் தவிர்த்தோரொடு இணைபேசில் உயிர்வாழேன்
என்றுறுதி பகர்கின்றாள்! தான்வாழ்தல் இறைவனுக்கே
மானிடர்க்கே அன்றென்று தன்னுறுதி பகர்கின்றாள்!
தொடர்கின்ற பாசுரங்கள் கோதைபுகழ் நாட்டிடுமே!

கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# கட்டுரை

**பிறப்பு, கல்வி:**

ஞானக்கூத்தனின் இயற்பெயர் ஆர்.ரங்கநாதன். 7 அக்டோபர் 1938-ல் பழைய தஞ்சாவூர் மாவட்டம் மாயவரம் அருகே உள்ள திருஇந்தளூர் என்னும் இடத்தில் கன்னடத்தை தாய்மொழியாகக் கொண்ட மாத்வ மரபைச் சேர்ந்த குடும்பத்தில் ராமராவ் - சாவித்ரி இணையருக்கு பிறந்தார்.



ஞானக்கூத்தனின் குடும்பம் ஆறுவேலி என்னும் பட்டம் கொண்டது. ஆறுவேலி பிரிவினர் காவிரிக்கரையோரமாக குடியேறியவர்கள். ஞானக்கூத்தனின் கொள்ளுத்தாத்தா காலத்தில் அவர்கள் தமிழகம் வந்து குடியேறியதாகவும், அவர் துவைதமரபு சார்ந்த தத்துவக் கல்வியும், சம்ஸ்கிருதக் கல்வியும் கொண்டவர் என்றும் ஞானக்கூத்தன் நேர்காணல்கள் என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

ஞானக்கூத்தனுடன் பிறந்தவர்கள் பத்து பேர். இரண்டாவது குழந்தையாகிய ஞானக்கூத்தன் கல்விகற்கும் செலவுமிகுதியாக இருந்தமையால் பள்ளியிறுதிக்கு மேல் படிக்க முடியவில்லை. அவர் தருமபுரம் ஆதீனத்து தமிழ்க்கல்லூரியில் சேர விரும்பினாலும் தந்தை அவர் வேலைக்குச் சென்று குடும்பத்தை பேணவேண்டுமென விரும்பினார். ஞானக்கூத்தன் உயர்நிலைப் பள்ளியில் படிக்கையில் தமிழில் ரெட்டியார் உபகாரச் சம்பளம் பெற்று முதல் மாணவராக திகழ்ந்தார்.

**தனிவாழ்க்கை:**

ஞானக்கூத்தன் பள்ளிக்கல்வி முடிந்தபின் ஆரம்பப்பள்ளி ஆசிரியராகவும், சிறப்புப் பணி ஆய்வாளராகவும் பணியாற்றினார். பின்னர் தமிழகப் பொதுப்பணித்துறை ஊழியராக பணியில் சேர்ந்தார்.


ஞானக்கூத்தன் ஜூலை 3, 1972-ல் கும்பகோணத்தில் சரோஜாவை திருமணம் செய்துகொண்டார்.

திரு குமர தர்மசீலன், இதழாசிரியர்

# ஞானக்கூத்தன்

## கட்டுரை

### தனிவாழ்க்கை:



ஞானக்கூத்தன் பள்ளிக்கல்வி முடிந்தபின் ஆரம்பப்பள்ளி ஆசிரியராகவும், சிறப்புப் பணி ஆய்வாளராகவும் பணியாற்றினார். பின்னர் தமிழகப் பொதுப்பணித்துறை ஊழியராக பணியில் சேர்ந்தார். ஞானக்கூத்தன் ஜூலை 3, 1972-ல் கும்பகோணத்தில் சரோஜாவை திருமணம் செய்துகொண்டார். சரோஜாவும் பொதுப்பணித்துறை அலுவலக உதவியாளர் பணியில் இருந்தார். ஞானக்கூத்தனுக்கு இரண்டு மகன்கள். திவாகர் ரங்கநாதன் இதழாளர், இன்னொருவர் சிங்கப்பூரில் வசிக்கிறார்.

### அரசியல் வாழ்க்கை:

ஞானக்கூத்தன் 1959 ஜூன் மாதம் முதல் ஆங்கில நாளிதழ்களை வாசிக்க ஆரம்பித்ததாகச் சொல்கிறார். அவருக்கு தொடக்கத்தில் ம.பொ.சிவஞானம் நடத்திவந்த தமிழரசுக் கழகத்தில் ஈடுபாடு இருந்தது. அவ்வமைப்பின் நிகழ்ச்சிகளிலும் போராட்டங்களிலும் கலந்துகொண்டார். பின்னர் அரசியல் செயல்பாடுகளில் இருந்து ஒதுங்கினார்.

### இதழியல்:

#### கசடதபற;

1970 முதல் வெளிவந்த கசடதபற சிற்றிதழின் குழுவில் ஞானக்கூத்தனும் இருந்தார். அதன் முதல் இதழில் தமிழை எங்கே நிறுத்தலாம் என்னும் ஞானக்கூத்தனின் கவிதை வெளிவந்தது. நா.கிருஷ்ணமூர்த்தி ஆசிரியராக இருந்தார். ஞானக்கூத்தன், க்ரியா ராமகிருஷ்ணன், சா.கந்தசாமி ஆகியோர் அதில் பணியாற்றினர்

திரு குமரர் தீர்மசீலன், இதழாசிரியர்

# ஞானக்கூத்தன்

## கட்டுரை

ழ

1978 முதல் ஆத்மாநாம் ஆசிரியராக இருந்து வெளிவந்த ழ என்ற கவிதைக்கான இதழில் ஞானக்கூத்தன் முதன்மைப்பங்காற்றினார். அதில் கவிதைகளுடன் கவிதை பற்றிய குறிப்புகளையும் மொழியாக்கங்களையும் எழுதினார். ஆத்மாநாம் தற்கொலைசெய்துகொண்டபின் மேலும் ஓர் இதழ் ஞானக்கூத்தன் பொறுப்பில் வெளிவந்தது


கவனம்;

1981-ல் கவனம் என்னும் சிற்றிதழ் ஞானக்கூத்தன் ஆசிரியத்துவத்தில் வெளிவந்தது. 1982-ல் ஏழு இதழ்கள் வெளிவந்தபின் அவ்விதழ் நின்றது. அதில் ஞானக்கூத்தனுடன் ஆர்.ராஜகோபாலனும் முதன்மைப்பங்காற்றினார்.

நவீன விருட்சம்;

அழகியசிங்கரை ஆசிரியராகக் கொண்ட நவீன விருட்சம் இதழ் 1988 முதல் வெளிவந்தது. அதில் ஞானக்கூத்தன் எல்லா இதழ்களிலும் பங்காற்றியதாக அழகியசிங்கர் குறிப்பிடுகிறார்.

இலக்கியவாழ்க்கை;



புலவர் கீரன் என அறியப்பட்ட கே.வி.வைத்யநாத சாமி ஞானக்கூத்தனின் பள்ளியில் மூத்த மாணவர். ஆறாம் வகுப்பில் ஆசிரியரான ஸ்ரீநிவாச ஐயங்கார் தமிழ்க்கவிதையில் ஈடுபாடு கொண்டவர். அவர்களிடமிருந்து இலக்கிய ஆர்வத்தை பெற்றார். பிரசங்கபூஷணம் என அறியப்பட்ட வரதராஜ ஐயங்கார் என்பவரின் சொற்பொழிவிலிருந்து மரபிலக்கியம் மீதான ஆர்வம் கொண்டு கவிதைகளை பள்ளிப்பருவத்திலேயே எழுதினார்.

திரு குமரர் தர்மசீலன், இதழாசிரியர்

### இலக்கியவாழ்க்கை;

ஞானக்கூத்தன் திருமந்திர ஈடுபாட்டால் ஞானக்கூத்தன் என்னும் பெயரைச் சூட்டிக்கொண்டார். 1956-ல் வெளிவந்த தோத்திரப்பாடல் அவருடைய முதல் படைப்பு. தொடக்கத்தில் மரபுக்கவிதைகள் எழுதிக்கொண்டிருந்த ஞானக்கூத்தன் புதுக்கவிதை மற்றும் நவீன இலக்கியத்தின் மீது எதிர்மனநிலை கொண்டிருந்தார்.

பின்னர் நவீன இலக்கியத்துக்குள் வந்து புதுக்கவிதைகள் எழுதியபோதும்கூட மரபுக்கவிதையின் சந்தம் மீது ஆர்வம் கொண்டிருந்தார்.

### கவிதைகள்;

ஞானக்கூத்தன் நேரடியான பகடியும், நுட்பமான அங்கதமும் கொண்ட கவிதைகளை எழுதியிருக்கிறார். அன்று வேறு கிழமை என்னும் அவருடைய கவிதைத் தொகுதி 1973, ஆகஸ்டில் இலக்கியச் சங்கம் வெளியீடாக கே. எம் ஆதிமூலம் பாஸ்கரன், சிதம்பர கிருஷ்ணன், வரதராஜன், தட்சிணாமூர்த்தி, பி. கிருஷ்ணமுர்த்திகோட்டோவியங்களுடன் பிரசுரமாகியது. தமிழில் உள்ளடக்கம், வடிவமைப்பு இரண்டுக்காகவும் புகழ்பெற்ற தொகுப்பு இது. அதிலுள்ள அன்று வேறு கிழமை, தேரோட்டம், காலவழுவமைதி போன்ற கவிதைகள் பெரிதும் பேசப்பட்டவை.

ஞானக்கூத்தன் 'பக்தி மரபு, ஆழ்வார் நாயன்மார் இவங்களை எதிர்க்கறவங்க, தனித்தனி மனிதர்கள், அவர்களோட பண்பாடு இவைகளோட தொடர்பு கொண்டிருந்ததனாலே பலகுரல்களாகத்தான் கவிதைகளை எழுதினேன். முதலில் என்னோட குரலை சுத்தமா ஒழிச்சுட்டேன். நான்ங்கிற சொல்லை பயன்படுத்த எனக்கு ரொம்பத் தயக்கம்' என்று தன் கவிதைகள் பற்றி நேர்காணலில் சொல்கிறார். தமிழ் நவீனக்கவிதை அந்தரங்கக் குறிப்புகளாக இருந்த சூழலில் இந்த பலகுரல்தன்மையும், படர்க்கைத் தன்மையும் ஞானக்கூத்தன் கவிதைகளுக்கு தனித்தன்மையை அளித்தன.

திரு குமர தர்மசீலன், இதழாசிரியர்

**விருதுகள்;**

- 2003 கவிதைக்கணம் விருது
- 2006 விளக்கு விருது
- 2006 புதுமைப்பித்தன் விருது
- 2009 விடியல் பாரதி விருது
- 2010 சாரல் விருது
- 2014 விஷ்ணுபுரம் இலக்கிய விருது




**இலக்கிய இடம்;**

தமிழ்ப் புதுக்கவிதையில் பகடியும் அங்கதமும் புதுமைப்பித்தன், சி.மணி ஆகியோரால் முன்னரே அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஞானக்கூத்தன் அதை அடுத்தகட்டத்திற்குக் கொண்டுசென்றார். மரபின் சந்தநயம் கொண்ட பகடிக்கவிதைகள் வழியாக தமிழில் ஒரு புதியபாதையை அவர் உருவாக்கினார். நவீனத்துவக் காலக் கவிதையின் இறுக்கம், தனிநபர் நோக்கு, அகவயப்பார்வை ஆகியவை இல்லாத அவருடைய கவிதைகள் தனித்து ஒலித்தன. நவீனத்துவம் மறைந்த பின்னர் உருவான கவிஞர்களிடம் ஞானக்கூத்தன் பெருந்தாக்கத்தைச் செலுத்தினார்.

"கவிதையின் உம்மனாம் மூஞ்சியை சிரிக்க வைத்த பெருமை ஞானக்கூத்தனுக்கு உண்டு. பேசிக்கொண்டிருந்த நவீனகவிதையை பாட வைத்த பெருமையிலும் அவருக்கு பங்குண்டு. அவருடைய சில கவிதைகள் புரியும்முன்னே நம்மை மயக்கிவிடும் மாயம் கொண்டவை. சில கவிதைகளை வாசித்து முடித்ததும் ஒரு பாட்டுப்பாடி முடித்த மனமகிழ்ச்சி நம்மை தொற்றிக்கொள்கிறது. இந்த இன்பத்திற்காகவும் அந்தக் கவிதைகளை அர்த்தசுமையின்றி திரும்ப திரும்ப வாசிக்கலாம்" என்று கவிஞர் இசை ஞானக்கூத்தனை பற்றிச் சொல்கிறார்.

**மறைவு**

ஞானக்கூத்தன் ஜூலை 27, 2016-ல் மறைந்தார்.

# நாளை நமதே

## வார்த்தையால் பேசுவதைவிட
## வாழ்ந்து காட்டுவதே
## சிறப்பு



அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com